Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

09.01.2021 சனிக்கிழமை

# தமிழர் தாயகத்தில் திங்களன்று ஹர்த்தால்

## தமிழ்க் கட்சிகள் கூட்டாக அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு முழுவதும் கர்த்தால் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2

## பல்கலை. நினைவுத்தூபி உடைப்பு

# உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர் மாணவர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 9
யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டம் கொரோனா நிலைமையால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. எனினும், இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்பது பேர் பல்கலைக்கழகம் முன்பாக உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். 2



# இடிக்கச் சொன்னது யாரெனத் தெரியாது

*மானியங்கள் ஆணைக்குழு*

கொழும்பு, ஜன. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை அகற்றுமாறு யாரால், எந்தக் காலப்பகு 2

# என் கையில் ஏதுமில்லை

*எல்லாம் பாதுகாப்புத் தரப்பிடமே!*
*கைவிரிக்கின்றார் துணைவேந்தர்*



யாழ்ப்பாணம், ஜன. 9
"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பான அதிகாரம் தற்போது எமது கையில் இல்லை. அது பாதுகாப் 2

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அகற்றப்படவேண்டிய ஒன்றே!

*கூறுகின்றார் துணைவேந்தர்*

யாழ்ப்பாணம், ஜன. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்தது எனவும் அந்தத் தூபி 2



# எங்களுக்கு சம்பந்தமில்லை

*இராணுவத்தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 9
முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று இராணுவத் 2

# மாணவர்கள் இருவருக்கும் பிணை

*கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் தலா 50* 2

# யாழில் இருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜன. 9
வடமராட்சி பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரியைச் 2

# மன்னாரில் இருவருக்கு கொரோனா

2

# தமிழ் மக்களின் உணர்வை நசுக்குவதற்குச் சமமானது!

*சி.வி.விக்னேஸ்வரன் கண்டனம்*



யாழ்ப்பாணம், ஜன. 9
தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக அவர்களுடைய அன்புக்குரிய உறவுகளை நினைவு 5

# அடக்குமுறையை ஏவினாலும் உணர்வை விலங்கிடமுடியாது

*சீமான் தெரிவிப்பு*



சென்னை, ஜன. 9
ஈழப் பேரழிவைச் சந்தித்து ஆறாரணத்தையும், கொடும் பேரிழப்பையும் சந்தித்து நிற்கும் 5

# நினைவுகளை அழிப்பது மற்றோர் இன அழிப்பே

**கனடா பிரம்டன் நகரபிதா தெரிவிப்பு**

பாரிஸ், ஜன. 9
போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் நினைவுகள் அழிக்கப்பட்டிருப்பது இலங்கை அரசினது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் இன்னொரு வடிவமே என்று 5

# இலங்கை அரசின் செயலால் உலகத் தமிழர்கள் வேதனை

**தமிழக முதலமைச்சர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபி இடிக் கப்பட்டமைக்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கண்டனம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பா ணம் பல்கலைக் 5

# தூபி அழிப்புச் சம்பவம் வேதனைக்கு உரியது!!

*பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் கவலை*

சென்னை, ஜன. 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபியை அழித்தமை வேதனைக்குரிய விடயம் என்று பா.ஜ.க. தேசிய மகளிரணித் தலைவர் 5

# நினைவுத்தூபி இடிப்பு காட்டுமிராண்டித்தனம்

*தமிழ்ப் பேரரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கண்டனம்*

சென்னை, ஜன. 9
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களால் கட்டியெழுப்பப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை ஒரே இரவில் இடித்துத் தள்ளியிருப்பது கோழைத்தனத்துடன் கூடிய காட்டுமிராண்டித்தனம் என்று தெரி 5

# தமிழர்...

எட்டு தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து வவுனியாவில் இன்று நடத்திய கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த5)

# உணவு ஒறுப்புப்....

இடித்தழிக்கப்பட்ட நினைவுத்தூபி மீள அமைக்கப்படவேண்டும் மற்றும் பல்கலைக்கழகத்துக்குள் நிலைகொண்டுள்ள சிறப்பு அதிரடிப்பயினரும் பொலிஸாரும் வெளியேறவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே உணவுஒறுப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தற்போது பல்கலைக்குள்ளே பொலிஸாரரும் அதிரடிப்ப.டையினரும் நிலைகொண்டிருக்க பல்கலைக்கழகத்துக்கு வெளியிலேயே மாணவர்கள் உள்ளனர், உள்ளே செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழகம் முன்பாக வீதியில் போராட்டத்தைத் தொடர யாழ்.மாநகர சபையும் அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று இரவு எவருக்கும் தெரியாது இடித்தழித்தது.
இந்த சம்பவத்தை கேள்வியுற்று இங்கு வருகை தந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் அரசுக்கும் எதிரான நடவடிக்கையில் இறங்கினர்.
அந்தப் போராட்டம் இன்று மதியம் வரை நீடித்த நிலையில், தடைகள், குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. இடத்தில் கூடியிருப்பவர்கள் வீடியோ எடுக்கப்பட்டு, அவர்களுடைய முகங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவேண்டி வரும் என்றும் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் ஒலிபெருக்கியில் அறிவுறுத்தல் விடுத்தனர். அதனால் பலரும் அந்த இடத்தைவிட்டு நீங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.
இந்த நிலையில், இது குறித்து யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் ப.உஜாந்தன் போராட்டம் நிறுத்தப்படுகின்றது என்று தெரிவித்தார்.
கொரோனாவைக் காரணங்காட்டி சகலரையும் தனிமைப்படுத்தவேண்டிவரும் என்பதாக பொலிஸாரின் அறிவுறுத்தல் அமைந்ததால், இதனை நாம் எமது சமூகத்தின் மீதான அக்கறை கொண்டவர்களாகவும் நாம் வன்முறையாளர்கள் அல்ல
என்பதனை சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறுவதற்காகவும் இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் வன்முறைகளை வெளிக்காட்டாமல் அமைதியாக போராட்டத்தை இடைநிறுத்துகின்றோம் என்று ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.
இந்த போராட்டம் மற்றுமொருநாள் அல்லது கொரோனா தொற்று நீங்கிய பின்னர் திகதியொன்றைக் குறிப்பிட்டு முன்னெடுப்போம்.
இங்கு யாருடைய ஆட்சி நடைபெறுகின்றது என்பதும், அவர்கள் என்ன நினைத்தாலும் செய்துவிடுவார்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். எனவே இங்கிருக்கும் அனைவரின் நலன்கருதியும் எமது சக மாணவர்களின் நலன் கருதியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த முடிவை
உத்தியோகபூர்வமாக எடுத்துள்ளது. இதை எமது மக்களுக்கும், புலம்பெயர் மக்களுக்கும் நல்லிணக்கத்தை விரும்பும் சகோதர மொழிபேசும் உறவுகளுக்கும் தெரியப்படுத்துகின்றோம் என்று ஒன்றியத் தலைவர் தெரிவித்தார்.
மாணவர்கள் பல்கலை வாயிலை மறித்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதனால், வாயிலை மறித்து போராட்டம் செய்யவேண்டாம் என்று கூறிய பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை விலகுமாறுகூறி அவர்கள் விலகியதும், நிலத்தில் அமர்வதற்கு போடப்பட்டிருந்த நிலவிரிப்பை பொலிஸார் தமது வாகனத்துக்குள் போட்டனர். (த-26,7,20)

# என் கையில்...

புத் தரப்பின் கையில் உள்ளது” என்று கைவிரிக்கின்றார், அதன் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா.
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக துணைவேந்தரை இன்று சந்தித்தனர். அதன்போதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார் என்று, மாணவர் ஒன்றியத் தலைவர் இ.அனுசன் தெரிவித்தார்.
“முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழிக்குமாறு மேலிடங்களிலிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாலேயே அது உடைக்கப்பட்டது. அதனை திரும்ப கட்டுவதோ, பல்கலைக்கழக பகுதியிலிருந்து இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வெளியேறுவது தொடர்பில் என்னால் கூறமுடியது” என்றும் துணை வேந்தர் கூறினார் என்று ஒன்றியத் தலைவர் தெரிவித்தார். (த-26)

# முள்ளிவாய்க்கால்.....

அகற்றப்படவேண்டியதொன்று என்றும் தெரிவித்தார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா.
அந்தத் தூபியை அகற்றியிருக்காவிட்டால் ஏனைய தூபிகளையும் அகற்றியிருப்பார்கள் என்றும் அவர் காரணம் தெரிவிக்கின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத்தினரால் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவுத்தூபி, நேற்றிரவு பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இடித்து அழிக்கப்பட்டது.
இதனையடுத்து, துணைவேந்தருக்கு எதிராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.
இது தொடர்பில் துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்.பல்கலைக்கழகம் என்பது அரசின் சொத்து. எனவே அரச சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது துணைவேந்தரின் கடமை. அதன் அடிப்படையிலேயே தூபியை இடித்து அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனெனில், குறித்த தூபி அமைப்பதற்கு அனுமதி எதுவும் பெறப்படவில்லை.
அனுமதி இல்லாத கட்டடங்கள் அனைத்தையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்று எனக்கு வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையிலேயே தூபியை அகற்றியிருந்தேன். சட்டபூர்வமில்லாது அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றுமாறும், அவற்றை அகற்றிவிட்டு எழுத்து மூலம் அறியத்தருமாறும் இந்தத் தகவல் தங்களுக்கு புலனாய்வு மூலம் தமக்குக் கிடைத்தது என்றும் கூறப்பட்டது. உரிய அதிகாரிகளுக்கு இது தொடர்பில் அறிவித்திருந்த நிலையிலேயே, இந்த விடயத்தை பராமரிப்புத் தரப்பினருக்கு அனுப்பியிருந்தேன். சிறிதான எதனைக் கட்ட வேண்டுமென்றாலும் உரிய அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என்று சுற்றறிக்கையில் உள்ளது. என்று தெரிவித்தார். (த-இ)

# இடிக்கச் சொன்னது...

தியில் அறிவுறுத்தப்பட்டது? என்பது குறித்து ஆராயப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.
யாழ். பல்கலைக்கழகம், நிர்வாகமொன்றின் கீழ் இயங்கும் சுயாதீன நிறுவனம் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.
இது குறித்து திங்கட்கிழமையே தம்மால் உறுதியான விடயங்களைக் கூற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தஇ)

# எங்களுக்கு....

தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை, பல்கலைக்கழக நிர்வாகத்தின் தீர்மானம் என்று தெரிவித்துள்ள அவர், அந்த விடயத்துக்கும் இராணுவத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவம் இந்தவிடயத்தில் தலையிடப் போவதில்லை என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.
பல்கலைக்கழகத்துக்குள் அமைதியின்மை ஏற்பட்டு, அதனைப் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத பட்சத்தில் மாத்திரமே இராணுவம் களமிறங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (தஇ)

# மன்னாரில்....

மன்னார், ஜன. 9
மன்னார் எருக்கலம்பிட்டியில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
இரண்டு தினங்களுக்கு முன்னர் மன்னார் எருக்கலம்பிட்டியில் ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனையடுத்து எருக்கலம்பிட்டி தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டது. கொரோனா நோயாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தனரென 298 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 202 பேரின் பி.சி.ஆர். அறிக்கை கிடைத்துள்ளது. அவர்களில் இரண்டு பேருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த213)

# மாணவர்கள்....

ஆயிரம் ரூபா பெறுமதியான ஒவ்வோர் ஆள் பிணையில் விடுவித்தது யாழ்ப்பாணம் நீதிமன்று. யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி பல்கலைக்கழக நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் நேற்று வெள்ளிக்கிழமை இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது.
இதனை அறிந்து மாணவர்களும் அரசியல் பிரதிநிதிகளும் சமூக ஆர்வலர்களும் பல்கலைக்கழக பிரதான வாயிலில் நேற்று இரவு முதல் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.
அவர்கள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.எஸ். பீற்றர் போலிடம் முற்படுத்தப்பட்டனர். அத்துமீறி பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்தமை மற்றும் கலகம் விளைவித்தனர் என்று இரண்டு குற்றச்சாட்டுகள் மாணவர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டன. மாணவர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், நடந்தவற்றை மன்றுரைத்து பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார். இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான், பிணை வழங்கினார். வழக்கு தவணையிடப்பட்டது. (த26)

# யாழில்....

சேர்ந்த இருவருக்கு சேர்ந்த கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. தென்பகுதியிலிருந்து வந்திருந்த அவரது நண்பருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. அவருடன் நெருங்கிப் பழகினார் என்ற அடிப்படையில் பருத்தித்துறையைச் சேர்ந்த மேற்குறித்த நபர் தனிமையில் இருந்தார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது கொரோனா தொற்று ஏற்பட்டமை உறுதிசெய்யப்பட்டது. (த26)

# தமிழினத்தின் மீது ஆயுதமற்ற போர்!!

## தமிழர் மரபுரிமைப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஜன.9

தமிழ் மரபுரிமைச் சின்னங்களை இல்லா தொழிப்பது அல்லது திரிவுபடுத்தும் அரசி யல் நிகழ்ச்சி நிரலை, ஆயுதமற்ற போராக, வடக்கு கிழக்கில், தமிழினம் மீது சிங்கள - பௌத்த அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த அடக்குமுறைக்கெதிராக எழுச்சி கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டா யத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பு தொடர்பில் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் சிங்கள அரசியல் சொல்லா டலை, பயங்கரவாதத்தின் மீதான வெற்றி என்று கூறி தமிழினப் படுகொலையை மறுத்து வந்துள்ளது. இன்று 11 வருடங்கள் முடிந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத் திலிருந்து முள்ளிவாய்க்கால் நினை வுத்தூ பியை அகற்றுவதென்பது, அரசின் ஒத்த அரசியல் சொல்லாடலை தக்கவைப்ப தோடு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொ லையைத் தொடர்வதுமாகும்.

தமிழினப் படுகொலையில் இறந்த மக் களை நினைவு கூருவது தமிழ் மக்களின் கூட்டுரிமை சார்ந்தது.

2009 க்குப் பின்னர் ஆயுதமற்ற போரை வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்த சிங்கள - பௌத்த அரசு, தொடர்ந்தும் தமிழி னத்தை அடக்குமுறைக்குள் வைத்துக் கொண்டு, சிங்கள - பௌத்த ஏகாதிபத்தி யத்தை வலுப்படுத்துகிறது. தமிழினத்தின் கூட்டுரிமைகளை ஈழத்தமிழ் அடையா ளம் சார்ந்து மறுத்து, நிராகரித்து, மீறி வருவதென்பது சிங்கள பௌத்த அரசு தனது அரசியல் நிகழ்ச்சி நிரலிலிருந்து மாறவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. என்றுள்ளது.(க)

# அடையாளத்தை அழித்தாலும் மனதிலிருந்து நீக்க முடியாது

## சத்தியலிங்கம் நினைவுபடுத்தல்

வவுனியா,ஜன.09

போரில் மரணி த்தவர்களது நினைவாலயங்களை அழிப்பதும், நினைவு தினங்களைத் தடுத்து நிறுத்துவதும் நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்பதற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை. மாறாகப் பிரச்சினைகளை உக்கிரப்படுத்தும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினை வுத் தூபி உடைக்கப்பட் டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

நாட்டில் அரசியல், பொருளாதார, சமூக உரி மைக்காக சிறுபான்மை யான மக்கள் முன்னெடுத்த 70 ஆண்டுகள் உரிமைப் போராட்டத்தில் ஏற்படுத் தப்பட்ட அடையாளங் களை, அழிப்பதனூடாக மக்கள் மனங்களில் இருந்து அவற்றை அழிக்க முடி யாது என்பதை சம்மந் தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலையான சமாதானமும், அபிவிருத்தியும் ஏற்படு வதை அரசு விரும்புமே யா னால், இவ்வாறான நட வடிக்கைகளை இனி மேலா வது செய்யாது பொறுப்பு டன் நடந்து கொள்ள வேண் டும்-என்றார். (க-246)





# மட்டக்களப்பில் நேற்று லசந்தவுக்கு அஞ்சலி

மட்டக்களப்பு, ஜன.9

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் 12ஆவது நினைவு தின நிகழ்வு, மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று அனுஷ்டி க்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவி யலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தீபச்சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அரிய நேந்திரன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவண பவன் மற்றும் மாவட்ட ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (வ-இ)

# கோவிட்- 19 தொற்று மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.9



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்த னர் என சுகா தார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு, இரத்தினபுரி ஆகிய பகுதி களைச் சேர்ந்த ஆண்கள் இருவரும், ஹொரனைப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருமே இவ்வாறு உயிரி ழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்துள் ளது. (ரி5-22)

# கல்முனையில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

அம்பாறை, ஜன. 9

கல்முனை பகுதியில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், தொற்றாளர்களை இனங்காண்ப தற்காகவும் பி.சி.ஆர்.பரிசோத னைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மருதமுனை கடற்கரை பகுதியில் மாலைப்பொழுதை கழிக்க வரும் நபர்களில் நேற்றுமுன்தின மும், நேற்றும் எழுமாறாக மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையின்போது 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப் பட்டது என கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார். (ரி5)



# விபத்தில் மூவர் காயம்

நுவரெலியா, ஜன. 9

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

கொழும்பிலிருந்து அக்கரப்பத்தனை பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த குறித்த முச்சக்கரவண்டி நேற்று மாலை தலவாக்கலை டயகம பிரதான வீதியில் லிந்துலை வைத்தியசாலைக்கு அருகாமை யில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள் ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசார ணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி5-இ)

# மின்னஞ்சலின் ஊடாக மோசடி செய்தோர் கைது

கொழும்பு, ஜன.9



இலங்கையிலுள்ளவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் பயன்படுத்தி, அதனூ டாக இணையத்தள மோசடிகள் முன்னெடுக்கப்படுகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மொரட்டுவை பகுதியில் வசிக்கும், கட்டட நிர்மாணத்தில் ஈடுபடும் ஒருவரால் மற்றொருவருக்கு 9 லட்சம் ரூபா வழங்கப்படுகிறது என மின்னஞ்சலூடாகத் தெரிவித்து மோசடி இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுகேகொடை பகுதியில் வசிக்கும் நைஜீரிய பிரஜை ஒருவரும் மருதானை மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளில் வசிக்கும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மூவரும் எதிர் வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

# உயர் தர மாணவர்களுக்கு செயன்முறை பரீட்சைகள்

கொழும்பு, ஜன.9

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும், 2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர் தர செயன்முறை பரீட்சைகளில் தோற்றவுள்ள, மாணவர்களுக்கு பரீட்சைகள் திணைக்களத்தால் விசேட அறிவிப்பு வெளியாகி யுள்ளது. மாணவர்கள், தமது பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி செயன்முறை பரீட்சைகளில் தோற்றலாமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன், தமது பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பி டப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்துக்கே பரீட்சார்த்திகள் செல்ல வேண்டும் என பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (வ-இ)

# கால்நடைகளில் பரவும் வைரஸ்; ஆராய விடே குழு நியமிப்பு

கொழும்பு, ஜன.9

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகளுக்கு இடையே பரவி வரும் வைரஸ் நோய் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கால்நடைகளுக்குப் பரவிவரும் வைரஸ் நோய் தற்போது வரை 14 மாவட்டங்களில் பரவியுள்ளது எனத் தெரியவந்துள்ளது. கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம், பொலநறுவை மற்றும் குருநாகல் முதலான மாவட்டங்களில் இந்த வைரஸ் அதிகளவில் பரவியுள்ளது என கால்நடை வளம், பண்ணை அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை ஆகிய கைத்தொழில் துறை இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் தெரிவித்துள்ளார். நோய் தொடர்பான தகவல்களை உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும் இது தொடர்பில் ஆராய அந்த அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## பெப்ரவரியில் தடுப்பூசி

கொழும்பு, ஜன.9

நாட்டு மக்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் இருந்து கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். தற்போதைய கொரோனா நிலை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்ப தற்கான முன்பதிவுகள் உலக சுகாதார அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் ரஷ்யாவிடமிருந்து கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## மாணவர்களுக்கு விசேட பஸ் சேவை

கொழும்பு, ஜன.9

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள பாடசாலைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மீளத் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதைக் கருத்திற்கொண்டு, பாடசாலை மாணவர்களுக்காக 'சிசு செரிய பஸ் சேவை' உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் சுமார் 800 சிசு செரிய பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். (வ-இ)

# அதிகாரத்தைப் பயன்படுத்த 13 தவிசாளர்களுக்குத் தடை

### கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை

திருகோணமலை, ஜன.9

கிழக்கு மாகாணத்திலுள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் பணிப்புரைக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தெரிவித்தார். வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை மற்றும் சபை தவிசாளர்கள் மீதான குற்றச்சாட்டு ஆகியவற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச சபைகள், நகரசபைகள் அடங்கலாக 13 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு அவர்களது அதிகாரத்தைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏறாவூர், அம்பாறை ஆகிய நகர சபைகளின் தலைவர்களுக்கும் பொத்துவில், இறக்காமம், பதியத்தலாவ, மண்முனை, வாகரை, வாழைச்சேனை, ஏறாவூர்பற்று, சேருவில, தம்பலகாமம், திருகோணமலை பட்டிணமும் சூழலும், மொரவெவ ஆகிய பிரதேச சபைகளின் தலைவர்களுக்குமே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு தொடர்பான விசேட வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. அதுவரை சபை அமர்வுகளை நடத்தவும் தவிசாளர்கள் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் எவ்வித மூலதன வேலைத் திட்டங்களையோ அல்லது இலவச விநியோகங்களையோ மேற்கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார். (வ-இ)

## மஹர சிறைக் கலவரம்; அரசுக்கு 6 கோடி இழப்பு

கொழும்பு, ஜன.9

மஹர சிறைச்சாலையில் கடந்த நவம்பர் மாதம் 29ம் திகதி இடம்பெற்ற குழப்பத்தால் அரசாங்கத்துக்கு ஆறரைக் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என அரச வழக்கறிஞர் நிஷாரா ஜயரத்ன நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளார். கலவரத்தில் 11 கைதிகள் உயிரிழந்தனர். அவர்களில் மூவரின் சடலங்களை அரச செலவில் பொருத்தமான இடமொன்றில் அடக்கம் செய்யுமாறு வத்தளை நீதவான், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டுள்ளார். அவர்களின் உறவினர்களுக்கு அவர்களது சமய முறைப்படி இறுதிக் கிரியைகளை மேற்கொள்ள அனுமதியளிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் இந்த 3 பேருக்கும் கொவிட் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)



வவுனியா தரணிக் குளம் கணேஸ் வித்தியாலய மாணவர்களுக்கு ஜேர்மன் சுர்காட் சித்தி விநாயகர் ஆலய அறக்கட்டளையினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப)

## கொலையில் முடிந்தது சொத்துப் பிரச்சினை

கொழும்பு, ஜன.9

மத்துகம வெலிமானாவ பகுதியில் 62 வயது பெண் ஒருவர் நேற்று அதிகாலை சொகுசு வாகனத்தால் மோதப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணின் 37 வயது மகன் ஏற்கனவே உயிரிழந்த நிலையில் இப் பெண் தற்போது கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த அவரது மகனின் சொத்துகளை பிரித்து கொள்வது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்தே இந்த கொலைச்சம்பவம் இடம் பெற்றுள்ளது என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)

## இலங்கையர் மூவர் மீது அமெ. வழக்குப் பதிவு!

வொஷிங்டன், ஜன.9

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத்தை ஆதரித்தனர் எனக் கூறி அமெரிக்க நீதித்துறை, மூன்று இலங்கையர்களுக்கு எதிராக குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளது. தாக்குதல்களின் பின்னணியில் இந்த மூவரும் உள்ளனர் என அமெரிக்க நீதித்துறை நேற்றுத் தெரிவித்துள்ளது.

மூவரில் மொஹமட் நௌபர் என்பவர் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சியாளராக செயற்பட்டவர் எனவும் மொஹமட் அன்வர் மொஹமட் ரிஸ்கன் என்பவர் தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளை தயாரிக்க உதவினார் எனவும் அஹமட் மில்ஹான் ஹயத்து மொஹமட் என்பவர் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கொன்றார் என்றும் அமெரிக்க நீதித் துறை தெரிவித்துள்ளது. இவர்கள் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்கு பொருள் ஆதரவு வழங்கினர் எனவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (வ-இ)

## ஈ.டி.ஐ. நிறுவனத்தின் பணிப்பாளர்கள் கைது

கொழும்பு, ஜன.9

ஈ.டி.ஐ. நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நால்வர் குற்றப் புலனாய்வு பிரிவால் நேற்று மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜீவக்க எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க, தீபா எதிரிசிங்க மற்றும் நாலக்க எதிரிசிங்க ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டமா அதிபர் வழங்கிய உத்தரவுக்கு அமையவே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். சுவர்ணமஹால் நிறுவனத்தில் இடம்பெற்ற நிதிமோசடி தொடர்பில் இவர்கள் இந்த வார ஆரம்பத்தில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந் நிலையில் ஈ.டி.ஐ. நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் தற்போது அவர்கள் மீளவும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நால்வரையும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## தமிழ் மக்களின்....

கூறுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டதுதான் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம். இராணுவப் பாதுகாப்புடன் அதை நிர்மூலமாக்குவது தமிழ் மக்களின் உணர்வுகளை நசுக்குவதற்கு ஒப்பானது.
இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக அமைக்கப்பட்டது.
மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என அனைத்துத் தரப்பினரும் இணைந்தே அதை அமைத்தார்கள். அதை நிர்மூலமாக்க வேண்டும் என்ற அரசின் உயர் தரப்பினரின் அழுத்தங்களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம், இராணுவப் பாதுகாப்புடன் அகற்றியிருக்கின்றது.
கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்கள் மீதான படுகொலைகள் போன்றவற்றின் நினைவுகளை முழுமையாக அகற்றி விட வேண்டும் என்பது தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் ஒரு அங்கமாகத்தான் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் முன்னெடுக்கும் மிகவும் ஆபத்தான வேலைத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இது போன்ற பல திட்டங்கள் இந்த அரசிடம் இருப்பதாகத் தெரிகின்றது.
இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தி விட முடியாது. இது இராணுவ ஒடுக்குமுறையின் கோரத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. அத்துடன் எம்மவரின் பயத்தின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது.
இப்பொழுது இங்கு நடப்பது வெகுவிரைவில் சிங்களப் பகுதிகளிலும் ஏதோ ஒருவிதத்தில் நடைபெறப் போகின்றதுஎன்பதை எமது சிங்கள சகோதர சகோதரிகள் உணர்வார்களாக என்றார்.(எஇ)

## அடக்குமுறையை ஏவினாலும்...

தமிழர்களைச் சீண்டும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடம் இரவோடு இரவாக இடித்துத் தகர்க்கப்பட்டுள்ளமை பேரதிர்ச்சி அளிக்கிறது. சிங்களப் பேரினவாதத்தால் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்தக் கோரச் சம்பவம் வன்மையானக் கண்டனத்திற்குரியது.
இவ்வாறு தமிழகத்தின் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி நேற்று இரவு இடித்தழிக்கப்பட்டது. அது தொடர்பாக விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
போர் முடிந்து, அங்கு அமைதி திரும்பிவிட்டது என்றுரைத்தவர்கள் இத்தகைய அடையாள அழிப்புக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அன்றைக்கு யாழ் நூலகம் எரிக்கப்பட்டது, இன்றைக்கு யாழ். பல்கலைக் கழகத்திலுள்ள நினைவு மண்டபம் அழிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றை இலங்கைக்குள் சிங்களர்களோடு இணைந்து தமிழர்கள் வாழ்கிறவரை, சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கீழ் இருக்கின்ற வரை எத்தனை ஆட்சி மாறினாலும் தமிழர்களுக்கு இதுதான் நிலை என்பதை இந்தச் சம்பவத்தின் வாயிலாக உலகத்தார் உணர்ந்துகொள்ள வேண்டும்.
எங்கள் மொழியைச் சிதைக்கலாம்; இனத்தை அழிக்கலாம். உரிமைகளைப் பறிக்கலாம். நிலங்களை ஆக்கிரமிக்கலாம். அடக்குமுறையை ஏவலாம். ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடலாம். பயங்கரவாதிகளென பழிசுமத்தலாம். ஆனால், எங்கள் உணர்வுகளுக்கு எந்த வல்லாதிக்கத்தாலும், பேரினவாதத்தாலும் விலங்கிட முடியாது. என்றார்.(எ-இ)

## இலங்கை அரசின் செயலால்....

கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தூபி நேற்று இரவு இடித்தழிக்கப்பட்டது. இது தொடர்பில் அவர் தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போரில் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டமை பேரதிர்ச்சியை அளிக்கிறது. உலகத் தமிழர்களைப் பெரும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ள இலங்கை அரசின் இந்த மாபாதகச் செயலுக்கும், அதற்கு துணை போன யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தருக்கும் எனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் பதிவிட்டுள்ளார்.(றஇ)

## தூபி அழிப்புச்...

வானதி சீனிவாசன் கவலை வெளியிட்டுள்ளார். தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மேம்படுத்தும் முயற்சிகளே தேவை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது சமீபத்திய இலங்கை விஜயத்தின் போது தமிழர்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்தார் எனவும் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ற-இ)

## நினைவுத்தூபி...

வித்துள்ளார் தமிழ்ப் பேரரசுக் கட்சியின் செயலாளர் வ.கௌதமன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
எப்பொழுதுமே நேர்மையற்ற, அறமற்ற முறையில் இனப்படுகொலை செய்யும் சிங்கள அதிகார வர்க்கத்துக்கு இந்தச் செயல் ஒன்றும் புதிதல்ல.
முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அழித்துவிட்டால் தமிழர்களின் மனதிலிருக்கும் நினைவு சுவடுகளை அழித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். வடக்கிலோ, கிழக்கிலோ இருக்கின்ற எம் இனத்தின் இளைய தலைமுறையினரின் மனதிலிருக்கும் வலிமிகுந்த யுத்த வடுக்களை ஒருபோதும் அழிக்க முடியாது. வரலாறு கூட சில நேரங்களில் மறைக்கப்படலாம் அறிவியலை ஒரு போதும் மறைக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது என்பதையும், ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பதையும் சிங்கள ஆட்சியாளர் மனதில் நினைவில் வைக்க வேண்டும். என்றார். (எ-இ)

## நினைவுகளை அழிப்பது...

கனடா ஒன்ராரியோ பிரம்டன் நகர பிதா பற்றிக் வோல்ரர் பிறவுண் தெரிவித்திருக்கிறார்.
போர் நினைவிடம் அழிக்கப்படுவதை கனடாவும் சர்வதேச சமூகமும் தலையிட்டுத் தடுக்கவேண்டும் என்று தனது டுவீற்றர் பதிவில் அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளே அமைந்திருந்த போரில் உயிரிழந்தவர்களின் நினைவிடம் புல்டோசர் கொண்டு இடித்தழிக்கப்பட்ட சம்பவத்துக்கு கனடாவில் கண்டனங்கள் வெளியாகி உள்ளன.
மக்களின் வரலாற்றை அழித்துத் துடைப்பது இன அழிப்பின் ஒரு பகுதியே என்று குறிப்பிட்டிருக்கின்ற கனடா பிரம்டன் நகர கவுன்சிலர் ஹர்கிரத் சிங், யாழ்ப்பாணச் சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த கவலையை தனது டுவீற்றர் பதிவில் வெளியிட்டிருக்கிறார்.
கனடாவின் அரசியல்வாதியும் ஒன்ராரியோ மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினருமாகிய விஜய் தணிகாசலம் இலங்கை அரசின் செயலை வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். விஜய் தணிகாசலம் ஸ்காபுரோ றூஷ் பார்க் பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் கனடாவின் தமிழ் அரசியல் பிரமுகர் ஆவர்.
முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இரவோடு இரவாக இடித்தழித்த செயல் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் கொதிப்பை மேலெழச் செய்துள்ளது. அதற்கு எதிராக சமூகவலைத் தளங்களில் கண்டனப் பதிவுகள் வேகமாகப் பரவி வருகின்றன. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பலவும் நினைவிடம் அழிக்கப்பட்டதைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. (எ-இ)

## பி.சி.ஆருக்கு ஒத்துழைக்காத பணியாளரும் கடையும் சுயதனிமை

*யாழ்ப்பாணம், ஜன. 9*
யாழ்ப்பாண நகர் நடைபாதை அங்காடியில் வர்த்தக நிலையம் ஒன்று, இன்று தனிமைப்படுத்தப்பட்டு, அங்கு கடமையாற்றும் 3 ஊழியர்களும் குடும்பங்களுடன் அவரவரின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. கடந்த வாரம் யாழ்ப்பாண நகர நடைபாதை அங்காடி வர்த்தகர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. எனினும், மேற்குறித்த வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்த நபர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்கவில்லை என்று மேலும் தெரிவித்தனர். (த-20)

## முள்ளியவளையில் தொடர்ச்சியாக கடைகள் உடைத்து திருட்டு!

முள்ளியவளை,இஜன.10
முள்ளியவளை பிரதேசத்தில் அண்மை நாள்களாக கடைகள் உடைக்கப்பட்டு பணம், பொருள்கள் திருடப்படுகின்றன என்று முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியிலும், நீராவிப்பிட்டி பகுதியிலும் உள்ள வணிக நிலையங்கள்,நகைக் கடைகள் என்பன இரவு வேளை உடைக்கப்பட்டு பணம் மற்றும் பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. கடந்த ஒரு மாத காலப்பகுதியில் நான்கு வரையான கடைகள் இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றால் வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-19)